## நன்றியுரை

முதுகல்விமாணிக் கற்கைநெறிக்கு நான் தெரிவுசெய்யப்பட்டதிலிருந்து அதனைப் பயிலும்போது மட்டுமன்றி இவ் ஆய்வினைத் தொடங்கி வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் வரை எனக்குப் பல்வேறு வழிகாட்டல்களையும், ஊக்குவிப்புக்களையும், ஒத்துழைப்புக்களையும், உதவிகளையும் பலர் வழங்கியுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இக் கற்கைநெறிக்கு என்னைத் தெரிவுசெய்ததுடன் கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கும் உதவிய இலங்கை திறந்த பல்கலைக்கழக கல்வித்துறையின் பீடாதிபதிக்கும், கல்விசார் ஆளணியினருக்கும் எனது நன்றிகளை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக முதுநிலை விரிவுரையாளர் தை. தனராஜ் அவர்கள் எனது ஆய்வு மேற்பார்வையாளராகக் கிடைக்கப்பெற்றமை எனக்குப் பெரும் வரப்பிரசாதம் ஆகும். முன்மொழிவைச் சமர்ப்பித்ததிலிருந்து அறிக்கையிடும் வரை எனக்கு அவர் அளித்த நேர்த்தியான வழிகாட்டலுக்கு அவருக்கு எனது மனப்பூர்வமான நன்றிகள்.

மேலும், எனது முன்னேற்றங்களுக்காக என்னை வழிப்படுத்திய ஏனைய விரிவுரையாளர்களான கலாநிதி பக்கீர் ஜப்பார், திரு. ரி. இராஜேந்திரம், திரு எஸ்.எஸ். சருக்டீன், திருமதி என். குகமூர்த்தி, திருமதி பி. தியோகராஜா மற்றும் வருகைதரு விரிவுரையாளர்களான பேராசிரியர்.சோ.சந்திரசேகரன் கலாநிதி.ம.கருணாநிதி ஆகியோருக்கும் இத் தருணத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆய்கருவிகளைத் தயாரிப்பதில் பெரிதும் உதவிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற் துறையின் முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

தரவுகளைத் தந்துதவிய மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விப்பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர், பெற்றோர், சமூகப் பெரியோர்கள், மற்றும் ஆய்வில் எனக்கு உதவிய நண்பர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆய்வறிக்கையை சிறப்புறக் கணணியில் பொறித்துத் தந்த கே.வி.எல் அச்சகத்தினரையும் நான் மறந்துவிட முடியாது. எனது கல்விமுயற்சிகளில் எனது குடும்பத்தினரின் ஒத்துழைப்பும் ஆதரவும் எப்போதும் போலவே இதிலும் இருந்தன. எனவே அவர்களுக்கும் எனது நன்றிகள்.

ஜெயகீதா